2018 ஜூன் 1] **[திரு. எடப்பாடி கே. பழனிசாமி]**

4. தமிழ்நாட்டில் உள்ள பழங்குடியின மக்களின் கலாச்சாரம் மற்றும் சூழல்-நட்பு வாழ்க்கையை அடையாளம் கண்டு, அவர்களின் கலாச்சார வளமையை மேம்படுத்தவும், இயற்கை-நட்பு வாழ்க்கை முறையைத் தெரியப்படுத்தவும், ஈரோடு மாவட்டத்திலுள்ள சத்தியமங்கலம் புலிகள் காப்பக புற எல்லைப் பகுதியில் அருங்காட்சியகம் மற்றும் பழங்குடியினர் சூழல் கலாச்சார கிராமம் ஒன்று 7 கோடி ரூபாய் செலவில் உருவாக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இது, தமிழ்நாட்டிலுள்ள பழங்குடியின மக்களின் சமூக, பொருளாதார வளர்ச்சியை பெரிய அளவில் ஏற்படுத்தும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-00

(ஆ) பள்ளிகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி, திறன் வகுப்பறைகள், ஆசிரியர்களுக்கு பணியிடைப் பயிற்சி, திறன் மேம்பாட்டுப் பயிற்சி, மாதிரிப் பள்ளிகள் உருவாக்கம், மாணவர்களுக்கு மேம்படுத்தப்பட்ட திறன் அட்டை வழங்குதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கல்விக்கு அளப்பரிய முக்கியத்துவம் அளித்து வந்தார்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் செயல்பட்டு வரும் அம்மாவின் அரசு தொடர்ந்து ஏழையெளிய மாணவர்கள் அனைவரும் பயன்பெறும் வகையில் பல்வேறு நலத் திட்டங்களை வெற்றிகரமாகச் செயல்படுத்தி வருகிறது. அதன் தொடர்ச்சியாக, பள்ளிக் கல்வித் துறை சார்பாக பின்வரும் அறிவிப்புகளை வெளியிடுகின்றேன்:*

1) பள்ளி மாணாக்கர்களின் நலன் கருதி, அனைத்துப் பள்ளிகளிலும் குடிநீர் வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன. தற்போது மாணாக்கர்களின் எண்ணிக்கைக்கேற்ப கூடுதலாக குடிநீர் வசதிகள் தேவைப்படும் 2,448 அரசு உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 48 கோடியே 96 இலட்சம் ரூபாய் செலவில் சுத்தமான மற்றும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [2018 ஜூன் 1

2) அரசு தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் தகவல் தொழில்நுட்ப உதவியுடன் அனைத்துப் பாடங்களையும் கற்றுக்கொள்வதற்கு ஏதுவாக, 2,283 திறன் வகுப்பறைகள் (Smart Classes) 42 கோடியே 92 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

[மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்) தலைமை]

3) நடப்புக் கல்வியாண்டு முதல் அறிமுகப்படுத்தப்பட உள்ள புதிய பாடத் திட்டத்தினை மாணவர்களுக்கு சீரிய முறையில் பயிற்றுவிக்க ஏதுவாக, அனைத்து ஆசிரியர்களுக்கும் பணியிடைப் பயிற்சி வழங்கப்படும். மேலும், தலைமை ஆசிரியர்கள் அவர்களது தலைமைப் பண்பினை மேம்படுத்திக்கொள்வதற்காக பயிற்சியும், ஆய்வு அலுவலர்களுக்குத் திறன் மேம்பாட்டுப் பயிற்சியும், தேசிய ஆசிரியர் தகவுக்கான (National Teacher Portal), கட்டகங்கள் (Modules) உள்ளீடு செய்தல் சார்ந்த பயிற்சியும் மற்றும் இதர பயிற்சிகளுக்காக 35 கோடியே 14 இலட்சம் ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

4) மாவட்டத்திற்கு ஓர் அரசு மேல்நிலைப் பள்ளி வீதம் 32 மாவட்டங்களிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட 32 பள்ளிகளுக்குத் தேவையான உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தி, கல்வி கற்பிக்கும் தரத்தை மேலும் உயர்த்தும் வகையிலும், வளர்ந்துவரும் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சிக்கேற்ப, இப்பள்ளிகள் மாதிரிப் பள்ளிகளாக செயல்படும்விதத்தில், ஒரு பள்ளிக்கு 50 இலட்சம் ரூபாய் வீதம் 16 கோடி ரூபாய் செலவில் மாதிரிப் பள்ளிகள் உருவாக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

5) மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் அரசுப் பள்ளிகளில் மாணவர்களுக்கான திறன் அட்டை வழங்கும் முன்னோடித் திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது. இத்திறன் அட்டையில் பல்வேறு புதிய அம்சங்கள் மற்றும் ஆதார் எண் இணைக்கப்பட்டு, மேம்படுத்தப்பட்ட திறன் அட்டையாக நடப்புக் கல்வியாண்டில் அரசு மற்றும் அரசு நிதியுதவிபெறும் பள்ளிகளில் பயிலும் அனைத்து மாணவ, மாணவிகளுக்கும் 11 கோடியே 25 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)